# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

Under Section 173 BNSS ~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040898

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 7/2024 Date: நாள் 26.10.2024

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (amendment) Act, 2018. Sections பிரிவுகள்: 7 (b)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 25.10.2024

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை Prior to 13.50 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 26.10.2024 Time : நேரம் 11.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.10.2024 Time : நேரம் 11.00 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Chairman, Nelliyalam Municipality at about 70 kms. West.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K Sivakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation தொழில் Husar Sarishtadar (Magisterial) Special District Inspection Cell Officer, The Nilgiris (g) Address : முகவரி District Collectorate The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tmt. S. Sivakami, Chairman, Nelliyalam Municipality Pandalur The Nilgiris District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 13.30 hrs.

Name: பெயர் A.T. Jai Kumar
Rank: நிலை DSP, V & AC, the Nilgiris ......No. எண் ..........

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2024/AC/NI, u/s. 7 (b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

இன்று 25.10.2024-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் துணை கண்காணிப்பாளர், அ.தி.ஜெய் குமார் ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), திரு.K.சீனிவாசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/2024, u/s. 7 (b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K.சிவக்குமார், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. ஐயா, பொருள்: நீலகிரி மாவட்டம் - நெல்லியாளம் நகராட்சி நகர மன்ற தலைவர் அலுவலகத்தில் 25.10.2024-ம் தேதி 13.50 மணிமுதல் 20.00 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. நான் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) ஆக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்டம், பந்தலூர், நெல்லியாளம் நகர மன்ற தலைவர் திருமதி.சிவகாமி என்பவர் நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கு 2024-2025 நிதியாண்டின் பொதுநிதியிலிருந்து 21 பணிகளுக்கு ஒப்பந்ததாரர்களுக்கு 22.10.2024-ம் தேதி பணி ஆணை வழங்கப்பட்டது. மேற்படி பணி ஆணை வழங்க தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக ஒப்பந்ததாரர்களிடமிருந்து 8%

கமிஷன் தொகையை கையூட்டாக கேட்டுப் பெறுவதாக நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு Pdl.A1.No.30/2024 நாள்:25.10.2024-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.அ.தி.ஜெய் குமார் மற்றும் காவல் குழுவினருடன் பந்தலூர், நெல்லியாளம் நகராட்சி நகர மன்ற தலைவர் அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொண்டேன். அந்த திடீர் ஆய்வின்போது நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு: திடீர் ஆய்வானது நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்தில் முதல் தளத்தில் அமைந்துள்ள நகர மன்ற தலைவர் அலுவலகத்தில் 13.50 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. முதல்தளத்தில் இருந்த பார்வையாளர்கள் அறை என்று எழுதப்பட்ட அறையில் நுழைந்தபோது ஒரு பெண் உட்பட ஐந்து நபர்கள் நின்றிருந்தனர். அவர்களை விசாரிக்க அதில் இருந்த பெண் ஒருவர் தான் நெல்லியாளம் நகர மன்ற தலைவர் திருமதி.S.சிவகாமி என்று தெரிவித்தார். அவர் அருகில் இருந்த மற்றொரு நபர் தனது பெயர் திரு.P.நாகராஜன் என்றும், தான் நெல்லியாளம் நகர மன்ற துணை தலைவர் என்றும் தெரிவித்தார். நகர மன்ற தலைவர் திருமதி.சிவகாமி அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னையும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து, எங்களுடைய உடைமைகளை காண்பித்தும், நகர மன்ற தலைவர் அலுவலகத்தை திடீர் ஆய்வு செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அங்கிருந்த மற்ற நபர்களிடம் விசாரிக்க ஒருவர், தான் நகர மன்ற துணை தலைவரின் மகன் திரு.N.சந்திரகுமார் என்றும், தனது தந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் அலுவலகத்திற்கு அழைத்து வந்ததாக தெரிவித்தார். அவருடன் இருந்த மற்ற இரு நபர்களிடம் விசாரிக்க ஒருவர் தனது பெயர் திரு.சக்கீர் உசேன் என்றும், அவர் நெல்லியாளம் நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரராக இருப்பதாக தெரிவித்தார். மற்றொருவர் தனது பெயர் திரு.A.அபுதாகிர் என்றும், அவர்

நெல்லியாளம் நகராட்சியில் பதிவுபெற்ற ஒப்பந்ததாரராக இருப்பதாக தெரிவித்தார். பின்னர் திரு.சந்திரகுமார், திரு.சக்கீர் உசேன் மற்றும் திரு.அபுதாகிர் ஆகியோர்களை பார்வையாளர் அறையில் இருந்த இருக்கைகளில் காவல் துணை கண்காணிப்பாளர் அமரச்செய்தார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் அந்த அறையில் இருந்து யாரும் வெளியில் செல்லாதவாறும், வெளியாட்கள் யாரும் உள்ளே வராதவாறும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. பின்னர் நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும், நகர மன்ற தலைவர் மற்றும் நகர மன்ற துணை தலைவர் ஆகியோர்களை அழைத்துக்கொண்டு நகர மன்ற தலைவர் அறைக்குள் சென்றோம். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் நகர மன்ற தலைவர் மற்றும் துணை தலைவர் இருவரையும் அவரவர் இருக்கையில் அமரச் செய்தார். நகர மன்ற தலைவர் பெயர் பலகை வைக்கப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த திருமதி.சிவகாமி அவர்களிடம் விசாரிக்க அவர் கடந்த 2½ வருடங்களாக நெல்லியாளம் நகர மன்ற தலைவராக இருந்து வருவதாக தெரிவித்தார். அவரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.சாதனபிரியா உதவியுடன் சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. பின்னர் அவரது மேசை சோதனையிடப்பட்டது. அப்போது நகர மன்ற தலைவர் என்று எழுதப்பட்டிருந்த அவரது மேசையின் மேல் "Radisson BLU" என்று கருப்பு மற்றும் வெள்ளை நிறத்தில் எழுதப்பட்டிருந்த வெள்ளை நிற நெகிழி பையின் உள்ளே "Balaramapuram Handloom" என்று ஆங்கிலத்தில் எழுதப்பட்டிருந்த நெகிழி பெட்டியில் 500, 200 மற்றும் 100 ரூபாய் நோட்டுக்களாக பணம் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. அதன் கீழே இரண்டாக மடிக்கப்பட்ட நிலையில் ஒரு வெள்ளை காகிதம் இருந்தது. அதில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 6 கட்டுகளாகவும் மற்றும் ஐநூறு, இருநூறு மற்றும் நூறு ரூபாய் நோட்டுக்கள் ஒரு கட்டாகவும் இருந்தது. அந்த பணத்தை நான் எண்ணிப்பார்க்க ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் தலா 100 எண்ணிக்கையில் 6 கட்டுகளாக ரூ.3,00,000/-; ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 60 எண்ணிக்கையில் ரூ.30,000/-; இருநூறு ரூபாய் நோட்டுக்கள் 36 எண்ணிக்கையில் ரூ.7,200/-; மற்றும் நூறு ரூபாய் நோட்டுக்கள் 3

எண்ணிக்கையில் ரூ.300/- என ஆக மொத்தம் ரூ.3,37,500/- இருந்தது. பின்னர் அந்த நெகிழி பெட்டியில் இருந்த வெள்ளை காகிதத்தை பிரித்துப் பார்க்க அதில் ஒப்பந்ததாரர்களின் பெயர் மற்றும் பணம் குறித்த விவரங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. நான், நகர மன்ற தலைவர் திருமதி.S.சிவகாமி அவர்களிடம் அந்த பணம் மற்றும் காகிதத்தில் இருந்த விவரங்கள் குறித்து விளக்கம் கேட்க, அவர் அந்த பணத்தைப்பற்றியும், காகிதத்தில் உள்ள விவரங்கள் பற்றியும் தனக்கு தெரியாது என்று கூறினார். அவர் எந்த விளக்கமும் கூறாததால், காகிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 11 ஒப்பந்தாரர்களுக்கு பணி ஆணை வழங்க தீர்மானம் நிறைவேற்றியதற்காக பெற்ற கையூட்டு பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பணம் ரூ.3,37,500/- மற்றும் அதனுடன் மடித்து வைக்கப்பட்டிருந்த குறிப்புகள் அடங்கிய மேற்படி வெள்ளைநிற காகிதம் விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் கைப்பற்றினார். மேலும், அவரது மேசை முழுவதும் சோதனையிடப்பட்டதில் வலதுபுற மேல் டிராயரில் 500 ரூபாய் நோட்டுக்கள் கத்தையாக மடித்து வைக்கப்பட்டிருந்தது. நான் அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ஐநூறு ரூபாய் நோட்டுக்கள் 10 எண்ணிக்கைகளில் மொத்தம் ரூ.5,000/- இருந்தது. அது குறித்து திருமதி.சிவகாமி அவர்களிடம் விளக்கம் கேட்க, தனக்கு தெரிந்த திரு.சிவராஜ் என்பவரிடம் வீட்டு செலவிற்கு வாங்கி வைத்திருந்த பணம் என்று தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்கவகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரது இருக்கைக்கு அருகில் இடதுபக்கம் இருந்த இரும்பு பீரோ முழுவதும் சோதனையிடப்பட்டதில் கைப்பற்றக்கூடிய பொருட்களோ, ஆவணங்களோ எதுவும் இல்லை. பின்னர் நகர மன்ற தலைவரின் இருக்கைக்கு வலதுபுறம் இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த திரு.P.நாகராஜன் அவர்களிடம் விசாரிக்க அவர் 2½ ஆண்டுகளாக நெல்லியாளம் நகர மன்ற துணை தலைவராக இருந்து வருவதாக தெரிவித்தார். அவரை சோதனை செய்ததில் அவரிடம் பணமோ பொருளோ எதுவும் இல்லை. பின்னர் அவரது இருக்கை முழுவதும் சோதனையிடப்பட்டதில் கைப்பற்றக்கூடிய பொருட்களோ,

ஆவணங்களோ எதுவும் இல்லை. பின்னர் நகர மன்ற கூடம் முழுவதும் சோதனையிடப்பட்டதில் கைப்பற்றக்கூடிய பொருட்களோ, ஆவணங்களோ எதுவும் இல்லை. பின்னர் பார்வையாளர்கள் அறையில் இருந்த திரு.N.சந்திரகுமார் என்பவரை சோதனை செய்ய, தனது பேண்டின் பின்பக்க வலதுபுற பாக்கெட்டிலிருந்து ரூ.140/-ஐ எடுத்து ஆஜர் செய்து பேருந்து செலவிற்கு வைத்துள்ளதாக தெரிவித்தார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அங்கிருந்த திரு.A.அபுதாகிர் என்பவரை சோதனை செய்ய அவரிடம் எந்தவித பொருளோ, பணமோ இல்லை. மேலும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் திரு.A.அபுதாகிர் என்பவரை விசாரிக்க அவர், 2024-2025-ம் நிதியாண்டிற்கான நெல்லியாளம் நகராட்சி பொதுநிதியிலிருந்து வார்டு எண்.16 வடமூலா பகுதியில் சிமெண்ட் சாலை மேம்பாடு செய்தல் பணிக்கு 17.10.2024-ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதாகவும், ரூ.4,35,000/- மதிப்பீட்டிலான மேற்படி பணி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 22.10.2024-ம் தேதி நகராட்சி ஆணையாளரால் பணி ஆணை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அவருக்கு ஒதுக்கப்பட்ட பணி ஆணை சம்மந்தமாக 21.10.2024-ம் தேதி மாலை சுமார் 04.00 மணியளவில் நகராட்சி அலுவலகம் சென்றபோது நகர மன்ற தலைவர் திருமதி.சிவகாமி அவரை அழைத்து நகர மன்ற அலுவலகத்தில் வைத்து, பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டு தொகையில் 8% கமிஷன் தொகையை கையூட்டாக கொடுக்கவேண்டும் என்று கூறியதாகவும், தான் கேட்ட கமிஷன் தொகையை கொடுக்கவில்லையென்றால், பணி தரமாக இல்லையெனக்கூறி பணி ஆணையை ரத்து செய்ய கோரியும், வேறு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க பரிந்துரை செய்தும் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பிவிடுவதாக கூறியதாக தெரிவித்தார். மேலும் அவர் 25.10.2024-ம் தேதி உறுப்பினராக இருக்கும் Government Registered Contractors Association-ஐ சேர்ந்த ஒப்பந்ததாரர்கள் 1) அசோக்குமார், 2) சகுந்தலா, 3) அலி அக்பர், 4) பாலசிங்கம், 5) சுரேஷ், 6) உசேன், 7) P.நௌஸாத், 8) ரசீது, 9) தனலட்சுமி ஸ்டோர் உரிமையாளர் ராஜா கொடுத்த 8% கமிஷன் தொகையுடன் சக்கீர் உசேன் பங்கு ரூ.30,960/- மற்றும் அவருடைய பங்கு தொகை ரூ.27,864/- சேர்த்து

மொத்தம் ரூ.3,37,500/-ஐ சக்கீர் உசேனுடன் நகர மன்ற தலைவர் அலுவலகம் வந்து சுமார் 13.30 மணிக்கு திருமதி.சிவகாமி அவர்களை சந்தித்து பணத்தை அவரிடம் கொடுத்துவிட்டு பேசிகொண்டிருந்ததாக தெரிவித்தார். மேலும் திருமதி.சிவகாமி அவர்கள் கையூட்டு கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளிக்கலாம் என்று இருந்ததாகவும் அதற்குள் லஞ்ச ஒழிப்புத்துறையினர் வந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர் அங்கிருந்த திரு.சக்கீர் உசேன் என்பவரை சோதனை செய்ய அவர் தன்னுடைய சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.550/-ஐ எடுத்து ஆஜர் செய்து செலவிற்கு வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் திரு.சக்கீர் உசேன் என்பவரிடம் விசாரிக்க, 2024-2025-ம் நிதியாண்டிற்கான நெல்லியாளம் நகராட்சி பொதுநிதியிலிருந்து வார்டு எண்.17 அம்பலக்கொள்ளி தர்ஷினி வீடு பகுதியில் சிமெண்ட் சாலை மேம்பாடு பணிக்கு 17.10.2024-ம் தேதி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதாகவும், ரூ.4,70,000/- மதிப்பீட்டிலான மேற்படி பணி அவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு 22.10.2024-ம் தேதி நகராட்சி ஆணையாளரால் பணி ஆணை வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். அவர் ஒப்பந்தபுள்ளி சம்மந்தமாக 17.10.2024-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகம் வந்தபோது நகர மன்ற தலைவர் திருமதி.சிவகாமி அவரை அழைத்து நகர மன்ற அலுவலகத்தில் வைத்து, பணி ஒதுக்கீடு செய்யப்படும் அனைத்து ஒப்பந்ததாரர்களும் மதிப்பீட்டு தொகையில் 8% கமிஷன் தொகையை தனக்கு கையூட்டாக கொடுக்கவேண்டும் என்று கேட்டதாக தெரிவித்தார். திருமதி.சிவகாமி கேட்ட கமிஷன் தொகையை கொடுக்கவில்லையென்றால், பணி தரமாக இல்லையெனக்கூறி பணி ஆணையை ரத்து செய்ய கோரியும், வேறு ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க பரிந்துரை செய்தும் ஆணையாளருக்கு அறிக்கை அனுப்பிவிடுவேன் என கூறியதாக தெரிவித்தார். மேலும், 25.10.2024-ம் தேதி அவர் உறுப்பினராக இருக்கும் Government Registered Contractors Association-ஐ சேர்ந்த

ஒப்பந்ததாரர்கள் 1) அசோக்குமார், 2) சகுந்தலா, 3) அலி அக்பர், 4) பாலசிங்கம், 5) சுரேஷ், 6) உசேன், 7) P.நௌஸாத், 8) ரசீது, 9) தனலட்சுமி ஸ்டோர் உரிமையாளர் ராஜா கொடுத்த 8% கமிஷன் தொகையுடன் அபுதாகிர் பங்கு தொகை ரூ.27,864/- மற்றும் அவரது பங்கு ரூ.30,960/- சேர்த்து மொத்தம் ரூ.3,37,500/-ஐ அபுதாகீருடன் நகர மன்ற தலைவர் அலுவலகம் வந்து சுமார் 13.30 மணிக்கு திருமதி.சிவகாமி அவர்களை சந்தித்ததாக கூறினார். அப்போது திருமதி.சிவகாமி அவர்கள் கமிஷன் குறித்து கேட்டதாகவும், அதற்கு அபுதாகிர் அவர் கொண்டுவந்த பணம் ரூ.3,37,500/-ஐ எடுத்து திருமதி.சிவகாமி அவர்களிடம் கொடுத்துவிட்டு பேசிக் கொண்டிருந்ததாக தெரிவித்தார். மேலும் திருமதி.சிவகாமி அவர்கள் கையூட்டு கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு லஞ்ச ஒழிப்பு துறையில் புகார் அளிக்கலாம் என்று இருந்தபோது லஞ்ச ஒழிப்புத்துறையினர் வந்துவிட்டதாக தெரிவித்தார். பின்னர், காவல் துணை கண்காணிப்பாளர் நெல்லியாளம் நகராட்சி ஆணையாளர் திரு.முனியப்பன் அவர்களிடம் நகர மன்ற தலைவர் அறைக்கு வருமாறு தகவல் தெரிவித்ததின் பேரில், நகராட்சி ஆணையாளர் நகர மன்ற தலைவர் அறைக்கு வந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டார். பின்னர் 2024-2025-ம் ஆண்டிற்கான நகர மன்ற கூட்ட வருகைப் பதிவேடு குறித்து நகராட்சி ஆணையாளரிடம் கேட்க, நகரமன்ற கூட்ட வருகை பதிவேட்டினை பொறியாளர் பிரிவு 'E1' இருக்கை எழுத்தர் திரு.பிரபு அவர்கள் மூலமாக எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டில் 31.03.2022-ம் தேதி முதல் 21.10.2024-ம் தேதி வரை நகர மன்ற கூட்டம் நடைபெற்றதற்கான பதிவுகள் உள்ளது. அப்பதிவேட்டில் பக்கம் 104-ல் 21.10.2024-ம் தேதி நகர மன்ற கூட்டம் நடைபெற்றது தொடர்பான பதிவுகள் உள்ளது. அந்த கூட்டத்தில் 6-வது மற்றும் 18-வது வார்டு உறுப்பினர்களான திரு.பொ.ரமேஷ் மற்றும் திருமதி.ஜெ.சாஹினா தவிர மற்ற அனைத்து வார்டு உறுப்பினர்களும் கலந்து கொண்டதற்காக கையொப்பம் செய்திருந்தனர். அப்பதிவேடு பார்வையிட்டதற்காக நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் சம்மந்தப்பட்ட பக்கத்தில் கையொப்பம் செய்து அவற்றின் ஒளி நகல் எடுத்து நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று

(பக்கம் 1 முதல் பக்கம் 4 வரை) விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினார். பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் நகர மன்ற கூட்ட தீர்மான பதிவேட்டினை கேட்க, நகராட்சி ஆணையாளர் அவர்கள் திரு.பிரபு என்பவர் மூலம் எடுத்து ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் நகர மன்ற துணை தலைவர் மற்றும் அனைத்து நகர மன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டி நகர மன்ற தலைவர் 17.10.2024-ம் தேதி கையொப்பமிட்ட கூட்டத்திற்கான பொருள் அடங்கிய விவரங்கள் 242 பக்கம் முதல் 308 பக்கம் வரை பதிவேட்டின் இடது பக்கத்தில் ஒட்டப்பட்டிருந்தது. ஒத்திவைக்கப்பட்ட பொருள் 1 முதல் 10 வரை மற்றும் புதிய பொருள் 1 முதல் 34 வரை என பதிவுகள் இருந்தது. அதில் 21 பணிகளுக்கான பதிவுகள் பொருள் 8 முதல் பொருள் 28 வரை குறிப்பிடப்பட்டிருந்தது. பதிவேட்டின் வலது பக்கத்தில் 21.10.2024-ம் தேதி மன்றம் அனுமதி வழங்கப்பட்டதற்கான குறிப்புகள் பக்கம் 243 முதல் பக்கம் 309 வரை இருந்தது. மேலும், 21 பணிகளுக்கு மதிப்பீட்டு தொகைக்கு குறைவாக ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை மன்றம் ஏற்கலாம் என அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அப்பதிவேட்டை பார்வையிட்டதற்காக நானும், காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களும் சம்மந்தப்பட்ட பக்கத்தில் கையொப்பம் செய்து அவற்றின் ஒளி நகல் எடுத்து நகராட்சி ஆணையாளர் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று (பக்கம் 1 முதல் 104 பக்கம் வரை) விசாரணைக்காக காவல் துண கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினார். பின்னர், 2024-2025-ம் நிதி ஆண்டின் நெல்லியாளம் நகராட்சி பொதுநிதியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 21 பணிகளுக்கான விவரம் குறித்து திருமதி.சிவகாமி அவர்களிடம் கேட்க, அதனுடைய விவரங்கள் பொறியியல் பிரிவில் இருப்பதாக தெரிவித்தார். ஆணையாளர் அவர்களிடம் காவல் துணை கண்காணிப்பாளர் மேற்படி 21 பணிகள் சம்மந்தமான கோப்புகள் குறித்து கேட்க, திரு.க.பிரபு என்பவர் மூலம் 21 பணிகளுக்கான கோப்பினை கொண்டுவரச் செய்து ஆஜர் செய்தார். மேற்படி கோப்புகளை பார்வையிட்டபின், 21 பணிகளுக்கான பணி ஆணைகள் (பக்கம் 1 முதல் 42 பக்கம் வரை) அதற்கான மன்ற தீர்மானங்கள்

(பக்கம் 1 முதல் 42 பக்கம் வரை) ஒளி நகல் எடுத்து நகராட்சி ஆணையாளர் அவர்களின் சான்றொப்பம் பெற்று விசாரணைக்காக காவல் துணை கண்காணிப்பாளர் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றினார். நான் திருமதி.S.சிவகாமி, திரு.சக்கீர் உசேன் மற்றும் திரு.அபுதாகிர் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். திடீர் ஆய்வானது 25.10.2024-ம் தேதி 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,37,500/- மற்றும் ஆவணங்கள், திருமதி.சிவகாமி, திரு.A.அபுதாகிர் மற்றும் திரு.A.சக்கீர் உசேன் ஆகியோர்களின் வாக்குமூலங்களை இத்துடன் இணைத்துள்ளேன். பணி ஆணை வழங்க தீர்மானம் நிறைவேற்றியதற்காக 11 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ரூ.3,37,500/- கையூட்டு பெற்ற நகர மன்ற தலைவர் திருமதி.S.சிவகாமி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் K.சிவக்குமார் உதகமண்டலம், 26.10.2024. Submitted: I have received the complaint on 26.10.2024 at about 11.00 hrs from Tr.K.Sivakumar, Husur Sarishtadar (Magisterial), Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.7/2024 u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at about 11.30 hrs ஒப்பம் A.T.Jai Kumar 26.10.2024 Deputy Superintendent of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.3,37,500/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.